**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.324/16**
**வழக்கு சாட்சி – அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தவமணி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சுப்பன் | தொழில் | நான் பிஎஸ்என்லில் வேலை பார்த்து பணிஓய்வு பெற்றுவிட்டேன். |
| கிராமம் | உத்தமபாளையம் | சமயம் | |
| தாலுக்கா | உத்தமபாளையம் | வயது | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.03.24

**( 1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

அசா1 மணிகண்டன் எனது அக்காவின் மகன். எதிரிகளை எனக்கு தெரியும். எங்களுக்கு மாரநாதாசர்ச்சில் பாஸ்டராக பணிபுரிந்த ஆம்போஸ் என்பவரை எங்களுக்கு தெரியும். அவர் மூலமாக விக்டர், அனிதா ஆகியோர்களை தெரியும். மேற்படி நபர்கள் எங்கள் வீட்டிற்கு ஜபம் செய்வதற்காக வருவார்கள் அப்படி வரும் போது எங்களுடைய கஷ்டங்களை கேட்டார்கள். அப்போது எனது மனைவியின் தங்கை தனலட்சுமி வேலையில்லாமல் இருந்தார். மருத்துவமனையில் தற்காலிக பணியில் இருந்தார். விக்டர் மற்றும் அனிதாவிடம் எங்கள் குடும்பத்தில் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு ஏதாவது வேலை வாங்கி தரும்படி கேட்டோம். அப்போது இபியில் கணக்கீட்டாளர் பணிக்கு ஆட்களை நிரப்பிக்கொண்டிருந்தார்கள். விக்டர் விசாரித்துவிட்டு 2,3 நாட்களில் சொல்வதாக கூறினார். மறுபடியும் போன் மூலம்விக்டர் அழைத்தார். தனலட்சுமிக்கு பணி வேண்டும் என்றால் ரூ3,50,000/– கொடுக்கவேண்டும் என்று கூறினார். நாங்கன் கடன் வாங்கி ரூ3,50,000/– 2012ம் வருடம் மார்ச் மாதம் விக்டர் மற்றும் அனிதாவின் வீட்டில் வைத்து கொடுத்தோம். எப்படி வாங்கி தருவீர்கள் என்று கேட்டதற்கு விக்டர் சென்னையில் இருக்கும் தலைமை பாஸ்டர்

பிலிப்ஸ்கென்றியை எனக்கு தெரியும் என்றும் அவர் மூலமாக மந்திரிகள், துறையை சார்ந்த அதிகாரிகள், எம்எல்ஏக்கள் எனக்கு பழக்கம் என்றும் அவர்களிடம் சொல்லி வாங்கி தருகிறேன் என்று கூறினார். அப்போது எனது அக்கா மகன் மணிகண்டனுக்கு இபியில் இருந்து உதவிபொறியாளர் பணிக்கு நேர்முக தேர்வுக்கு கடிதம் வந்தது. நாங்கள் அந்த கடிதத்தை விக்டர் மற்றும் அனிதாவிடம் காட்டினோம். மணிகண்டனுக்கும் பிலிப்ஸ்கென்றியை மூலமாக மந்திரிகள், துறையை சார்ந்த அதிகாரிகள், எம்எல்ஏக்கள் வேலை வாங்கி தருவதாக கூறினார். ரூ12 லட்சம் பணம் வேண்டும் என்று கேட்டார். எனது மாமனார் சுருளிவேல் அவருடைய இடத்தை விற்று ரூ.4 லட்சம் முன்பணமாக கொடுத்தார். நான் பைனான்ஸ் மூலமாக ரூ.3 லட்சம் கொடுத்தோம். தெரிந்தவரிகளிடம் பணம் வாங்கி மொத்தமாக ரூ5 லட்சம் கொடுத்தோம். ஆக மொத்தம் ரூ.12 லட்சம் 2013 ல் கொடுத்தோம். விக்டர் மற்றும் அனிதாவிடம் நான் கடன் பெற்ற நபர்கள் என்னை தொந்தரவு செய்ததால் 1 லட்சத்தை திரும்ப பெற்றுவிட்டேன். விக்டர் மற்றும் அனிதா எங்களுக்கு ரூ14,50,000/– தரவேண்டியிருந்தது. காலதாமதமானதால் மேலும் வேலை எதுவும் கிடைக்காததால் மேற்படி இருவரிடமும் நாங்கள் பணம் பற்றி கேட்டோம். விக்டர் மற்றும் அனிதா எங்களுக்கு பணத்திற்காக ரூ50 பத்திரத்தில் எழுதி கொடுத்ததாக கூறி எழுதிக்கொடுத்தார். மேலும் சிறிது நாட்கள் கழித்து வருமாறு சிறிதளவு பணத்தை கொடுப்பதாகவும் கூறினார். சிறிது நாட்கள் கழித்து தனலட்சுமி பெயரில் 8 லட்சத்திற்கான ஸ்டேட் வங்கி காசோலை கொடுத்தார். அதை வசூலுக்கு தாக்கல் செய்த போது பணம் இல்லை என திருப்பப்பட்டுவிட்டது. மறுபடியும் எதிரிகளிடம் சென்று கேட்டபோது எதிரிகள் மற்றொரு காசோலையை எனது மனைவி ஈஸ்வரியின் பெயரில் 6,50,000/– த்திற்கான காசோலை கொடுத்தார். அதை வசூலுக்கு தாக்கல் செய்த போது பணம் இல்லை என திருப்பப்பட்டுவிட்டது. மீண்டும் எதிரிகளிடம் கேட்டோம். வட்டி கட்டமுடியாமல் கஷ்டத்தில் இருக்கிறோம் என கூறினோம். அதனால் அவர் மீண்டும் மணிகண்டன் பேரில் 14,50,000/– ஐசிஐசி வங்கி காசோலை கொடுத்தார். அதை எடுத்து வசூலுக்கு தாக்கல் செய்த போது பணம் இல்லை என திருப்பப்பட்டுவிட்டது. மறுநாள் நாங்கள் 4,5 பேர் போய் கேட்கவும், 4 லட்சம் பணத்தை கொடுத்துவிட்டு மீத

பணத்தை இரண்டு நாட்கள் கழித்து கொடுப்பதாக கூறினார். இரண்டு நாட்கள் கழித்து போய் கேட்டபோது ரூ50 ஆயிரம் கொடுத்தார். இரண்டு நாட்கள் கழித்து சென்று கேட்ட போது மீண்டும் ரூ.50 ஆயிரம் கொடுத்தார். மீத பணத்தை 10 நாட்கள் கழித்து வாங்கி கொள்ளும்படி கூறினார். நாங்கள் 10 நாட்கள் கழித்து கேட்டபோது 4,5 ஆட்களை வைத்து எங்களை அடித்து கொன்றுவிடுவேன் என்றும் தகாத வார்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்தார். பணத்தை நாங்கள் நீதிமன்றம் மூலமாக வாங்கி கொள்கிறோம் என்று அவரிடம் கூறவிட்டு வந்தோம். அதன்பின்னர் எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்தோம். அப்போது எதிரிகளிடமிருந்து போலிசார் எங்களுக்கு ரூ5 லட்சம் பணத்தை பெற்றுக்கொடுத்தார்கள். நாங்கள் வாங்கி கொண்டோம். எதிரிகள் மீதி ரூ4,50,000/- தரவேண்டும். என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ.2 ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை** செய்யபடவில்லை.